මගේ අංකය
எனது இல.
My No.

ඔබේ අංකය
உமது இல.
Your No .

දිනය
திகதி
Date. 15.10.2024

# ශ්‍රී ලංකා මානව හිමිකම් කොමිෂන් සභාව
# இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு
# Human Rights Commission of Sri Lanka

ஜனாதிபதி திரு அனுரகுமார திசாநாயக்க,
இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் ஜனாதிபதி
ஜனாதிபதி செயலகம்,
கொழும்பு 01.

ஜனாதிபதி அவர்களுக்கு,

## பொது மக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் 12 ஆவது பிரிவின் கீழான விசேட அதிகாரங்கள்

இலங்கையின் நிறைவேற்று ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட அதிமேதகு உங்களுக்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு (இ.ம.உ.ஆ) தனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது.

பொது மக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் 12 ஆவது பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட 2024 செப்டம்பர் 26 ஆம் திகதிய 2403/47 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் (அத்தியாயம் 40) வெளியிடப்பட்ட கட்டளை தொடர்பாக ஆணைக்குழுவின் கருத்தை எழுத்துபூர்வமாக தங்களுக்கு சமர்ப்பிக்கின்றோம். அந்தக்கட்டளை ஊடாக, 2024 செப்டம்பர் 27 ஆம் திகதி முதல் ஒரு மாத காலத்திற்கு இலங்கையின் ஒவ்வொரு நிர்வாக மாவட்டத்திலும் பொது ஒழுங்கை பேணி வருவதற்காக இலங்கை இராணுவம், இலங்கை கடற்படை மற்றும் இலங்கை விமானப்படையின் அனைத்து உறுப்பினர்களும் அழைக்கப்பட்டுள்ளனர்.

சர்வதேச மனித உரிமைகள் நியமங்களுக்கும் தராதரங்களுக்கும் இணங்க அரசாங்கமொன்றினால் நிர்வாகம் சார்ந்த நடவடிக்கைகள் எடுக்கப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக பின்பற்ற வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக குறித்த அந்த அரசாங்கத்திற்கு பரிந்துரைகளை முன்வைப்பதற்காக 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் பிரிவு 10 (ஈ) பிரிவின் பிரகாரம், ஆணைக்குழுவிற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

பொது மக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் 12 (1) பிரிவு மீது தங்களின் கவனத்தைச் செலுத்துமாறு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு (இ.ம.உ.ஆ) கேட்டுக்கொள்கின்றது.

ஏதேனும் ஒரு பிரதேசத்தின் பொது மக்களின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலான நிலைமைகள் ஏற்பட்டால் அல்லது ஏற்படவிருக்கும் சந்தர்ப்பத்தில் மற்றும் அவ்வாறான நிலைமையொன்றுக்கு முகங்கொடுப்பதற்கு அந்தப் பிரதேசத்தில் ஈடுபடுத்தப்பட்டிருக்கும் பொலீஸார் போதுமானளவில் இல்லையென ஜனாதிபதியவர்கள் கருதும் சந்தர்ப்பத்தில், அந்தப் பிரதேசத்தின் (வலியுறுத்தல் சேர்க்கப்பட்டது), பொது ஒழுங்கைப் பேணி வருவதற்காக வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளையொன்றினூடாக அனைத்து அல்லது எந்தவொரு ஆயுதப்படை அங்கத்தவர் அல்லது எந்தவொரு நபரையும் அழைப்பதற்கு ஜனாதிபதியினால் முடியும்.

முக்கியமாக ‘பொது மக்கள் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலான நிலைமைகள் உருவாகும்போது’ மற்றும் ‘அத்தகைய சூழ்நிலையை சமாளிப்பதற்கு பொலீஸ் போதுமானதாக இல்லை’ என்ற கருத்து கட்டியெழுப்பப்படல் தொடர்பாக மேற்குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளில் உள்ளடக்கப்பட்டுள்ள



ප්‍රධාන කාර්යාලය / தலைமைக் காரியாலயம் 14, ආර්. ඒ. ද මෙල් මාවත, කොළඹ - 04. / 14, ஆர்.ஏ.த.மெல் மாவத்தை, கொழும்பு-04.
සභාපති / தவிசாளர் / Chairperson 011-2505451
ෆැක්ස් / தொலைநகல் / Fax 011 2505541/74
විද්‍යුත් තැපෑල / மின்னஞ்சல் / E-mail sechrcsl@gmail.com

கடுமையான அளவுகோல்கள் தொடர்பாக கவனத்திற் கொள்ளுமாறு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு (இ.ம.உ.ஆ) கேட்டுக்கொள்கிறது. குறிப்பாக, பொது மக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் 12 வது பிரிவின் கீழ் பொது மக்கள் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படும் விதத்திலான விசேட நிலைமைகள் ஏற்பட்டுள்ளதாகவும், நாட்டின் பொது ஒழுங்கைப் பேணி வருவதற்கு இலங்கை பொலீஸுக்கு ஆற்றல் இல்லையெனவும் ஜனாதிபதியவர்கள் கருதும் சந்தர்ப்பத்திலேயே ஆயுதப் படைகளை ஈடுபடுத்த வேண்டிய தேவையேற்படுகின்றது. அவ்வாறான அளவுகோல்கள் ஊடாக பொது மக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் 12 வது பிரிவின் கீழ் வெளியிடப்படும் கட்டளையின் சிறப்புத் தன்மை தொடர்பாக சுட்டிக்காட்டுவதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் (இ.ம.உ.ஆ) வலியுறுத்தப்படுகின்றது. கடந்த சில வருடங்களாக இவ்வாறான கட்டளைகளை வழங்குதல் சாதாரண விடயமாக இருந்த போதிலும், பொது மக்களின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படும் முக்கியமான சந்தர்ப்பங்களில் மாத்திரமே இவ்வாறான கட்டளைகள் பிறப்பிக்கப்படல் வேண்டும் எனவும், இவ்வாறானதொரு நிலைமையை சமாளிப்பதற்கு பொலீஸ் விசேட அதிரடிப்படை உள்ளிட்ட இலங்கை பொலீஸ் போதுமானதாக இல்லாத சந்தர்ப்பங்களில் மாத்திரமே எனவும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் கருதப்படுகின்றது. இது தொடர்பான சர்வதேச மனித உரிமைக் கோட்பாடுகள் மற்றும் நியமங்களுக்கிணங்க, சிறப்பு சூழ்நிலைகளில் மாத்திரமே பொலீஸ் அதிகாரங்களைப் நடைமுறைப்படுத்துவதற்காக , ஆயுதப் படைகளை ஈடுபடுத்துவதற்கு அரசுகள் கடமைப்பட்டுள்ளன. உதாரணமாக, சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச பொருத்தனை நடைமுறைப்படுத்தப்படும் விதத்தை கண்காணிப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள அதிகாரம் பெற்ற அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான ஐக்கிய நாடுகள் அமைப்பின் மனித உரிமைகள் குழு, பொலீஸின் கடமைகளை நிறைவேற்றுவதற்காக ஆயுதப்படைகளை ஈடுபடுத்துதல் குறித்து தனது தீவிர கவலையை வெளிப்படுத்தியுள்ளது. அந்த வகையில், ஆயுதப் படைகளை ஈடுபடுத்துவதனூடாக ஒரு நாட்டின் மனித உரிமைகள் பாதுகாப்பின் மீது ஏற்படுத்தக்கூடிய எதிர்மறையான தாக்கம் தெளிவாக முன்வைக்கப்பட்டுள்ளது.

எனவே, இதுபோன்ற கட்டளைகளை பிறப்பித்தல் தொடர்பாக மறுபரிசீலனை செய்யுமாறும், பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் சிவில் அதிகாரிகள், அதாவது இலங்கை பொலீஸ் மீது நம்பிக்கை வைக்கும் செயற்பாட்டை மீள் கட்டமைக்குமாறும் தங்களைக் கேட்டுக்கொள்கிறோம்.

இலங்கையில் தற்போது பாராளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளதாலும், தற்போது தேர்தல் காலப் பகுதியாக இருப்பதனாலும், அரசியலமைப்பின் 104 D பிரிவு மீது ஜனாதிபதியவர்களின் கவனத்தை செலுத்துமாறு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு (இ.ம.உ.ஆ) கோருகிறது. சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தலை நடாத்துவதற்கு பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய எந்தவொரு நடவடிக்கைகளை அல்லது சம்பவங்களை தடுத்தல் அல்லது கட்டுப்படுத்துவதற்கு ஆயுதப் படைகளை ஈடுபடுத்தல் தொடர்பாக ஜனாதிபதியவர்களுக்கு பரிந்துரைகளை முன்வைப்பதற்கு அந்த ஏற்பாட்டின் கீழ் இலங்கை தேர்தல் ஆணைக்குழுவிற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணைக்குழுவினால் அத்தகைய பரிந்துரையொன்று வழங்கப்பட்டிராத சந்தர்ப்பத்தில் பொது மக்கள் பாதுகாப்பு சட்டத்தின் 12 ஆவது பிரிவின் கீழ் கட்டளையொன்றைப் பிறப்பிக்க முடியுமா என்பது சம்பந்தமாகவும் கவனத்திற்கொள்ளுமாறு தங்களைக் கேட்டுக்கொள்கிறோம்.

இறுதியாக, பொது மக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் 21(4) பிரிவு தொடர்பாக, அதாவது ' 12 ஆம் பிரிவின் கீழ் பிறப்பிக்கப்பட்ட கட்டளையொன்றை... பாராளுமன்றத்தினது தீர்மானத்தின் மூலம் திருத்தியமைப்பதற்கு அல்லது இரத்து செய்வதற்கு முடியும்...' என்ற விடயம் தொடர்பிலும் கவனத்திற்கொள்ளுமாறு தங்களைக் கேட்டுக்கொள்கிறோம். பொது மக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் 12 ஆவது பிரிவின் கீழ் ஜனாதிபதியவர்களால் மேற்கொள்ளப்படுகின்ற எந்தவொரு கட்டளை தொடர்பிலும் பாராளுமன்றத்தின் கண்காணிப்பு மேற்கொள்ளப்படல் வேண்டுமென்ற விடயத்தை இந்த ஏற்பாட்டினூடாக உறுதி செய்யப்படுகின்றது. எனவே,

பாராளுமன்றம் கலைக்கப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில் பொது மக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் 12 வது பிரிவின் கீழ் அவ்வாறான கட்டளையொன்றைப் பிறப்பித்தல் பொருத்தமானதா என்பது சம்பந்தமாக கவனத்திற்கொள்ளுமாறும் தங்களைக் கேட்டுக்கொள்கிறோம்.

இந்த விடயம் தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் (இ.ம.உ.ஆ) அவதானிப்புக்கள் தொடர்பாக கவனத்தை ஈர்த்தமைக்காக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அதிமேதகு தங்களுக்கு தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது. இலங்கையில் மனித உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் ஊக்குவித்தல் மீது பாதிப்புச் செலுத்துகின்ற நிர்வாக ரீதியிலான நடவடிக்கைகள் தொடர்பில் ஆணைக்குழு தனது தொடர்ச்சியான ஆலோசனைகளையும் உதவிகளையும் வழங்குவதற்கு அர்ப்பணிப்புடன் நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதனை தயவாய் அறியத் தருகின்றோம்.

**நீதவான் எல்.ரீ.பி.தெஹிதெனிய,**
உயர் நீதிமன்ற நீதியரசர் (ஓய்வு பெற்ற),
தவிசாளர்,
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு.

Justice L.T.B.Dehideniya
Judge of the Supreme Court (Retired)
Chairman
Human Rights Commission of Sri Lanka

பிரதி: கௌரவ சட்ட மா அதிபர்
சட்ட மா அதிபர் திணைக்களம்,
கொழும்பு 12